உ

கற்பகவிநாயகர் துணை.

18NOV

ஆலநகர்

செங்கழனி புற்றுமாரி

அம்மன் சிந்து.

திருக்கோவிலூர் தாலுக்கா ஆலங்குப்பத்தில் இருக்கும்

பா. பொன்னுசாமி பிள்ளை

இயற்றியதை

A. S. நாராயணசாமி பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு

அரசூர் போர்டு ஸ்கூல் அஸிஸ்டெண்டு டீச்சர்

A. K. குமரஸாமி பிள்ளை அவர்களால்

விழுப்புரம்

ஸ்ரீ ருக்மணி விலாஸ் பிரஸில்.

பதிப்பிக்கப்பட்டது.

1932 [0—0—6.

759

Q25:4U7
N32

உ

கற்பகவினாயகர் துணை.

ஆலநகர் செங்கழணி புற்றுமாரி

அம்மன் சிந்து.

48155

விநாயகர் காப்பு.

சித்திபுத்திமகிழும் செல்வக்கணபதியே
முத்திக்குவித்தாம் முதல்வனே—இத்தரையில்
பக்தியுடன் மாரியின்மேல் பாடலதைப்பாடுதற்கு
யுத்தமனே நீ வந்துகார்

மாரியம்மன் ஸ்துதி.

தேவிமனோன்மணியே சிற்சொரூபமாரியரே
பூவுலகில்பக்தர்களை மேவிவந்துகார்த்திடவே
தாவிசிங்கவாகனத்தில் தயாபரியேநீயமர்ந்து
ஆவலுடன்எந்தனைநீ அன்பாககார்த்திடுவாய்

சுருளிமலை மீதுமேவும்சீலா என்ற வர்ணமெட்டு.

1. புதுப்பட்டுதன்னில்வாழும்மாரி உந்தன்
பொன்னடிதரவே நானும்கோறி மிக
புக்தியுடன்பத்தியாக உத்தமியேகாரும்
ரணவீரி சூரசங்காரி (புதுப்)

2. தீராதவினையகற்றநீயே திருச்
சித்தம்கொண்டு மாம்பாக்கம்வந்தாயே புகழ்
தேவிஜெகரக்ஷகியே மேவியேஎந்தனைநீயே
கார்ப்பாய் பதம்சேர்ப்பாய் (புதுப்)

3. மாம்பாக்கம் நகர்தன்னிலேஇருந்து வந்த
மானிடரின் பிணிகளைத்தீர்த்து மிக
மாக்ஷிமையாய் பக்தர்களின் தாக்ஷியான ஆபத்தை
தவிர்த்து அருள்நிறைத்து (புதுப்)

4. மாம்பாக்கம் தன்னைநீயும்விட்டு வெகு
மாண்புடனே ஆலநகர்தொட்டு மிக
மாபெருகும் பத்தனுக்கு மேவியேசொர்ப்பனத்தி
லுறைத்து புகழ்நிறைத்து (புதுப்)

5. பாடல்பெற்ற வெண்ணைநல்லூர்ஸ்டேஷன் கீழ்
பாகத்தில் அயினரப்பன்வாசம் மரம்
பாதிரியின் கீழமர்ந்த மேவிபுற்றிடத்திருக்கும்
தாயே கார்ப்பாயே (புதுப்)

6. வெள்ளிக்கிழமைதோறும் கோடி ஜனம்
விந்தகியே யுன்னைப்பார்க்கநாடி மிக
வேண்டிவந்த மானிடரின் வினைகளைவேரறுக்கும்
சத்தி புகழ்நத்தி. (புதுப்)

Q25:417 N32

பாண்டியனீன்றமீனாக்ஷி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

தாயேமகமாரி உந்தனின் தாள்பணிந்தேனே சிங்காரி (தாயே)

அநுபல்லவி.

பாமரர்களை புவியில் பாதுகார்த்திடும் ஒய்யாரி (தாயே)

தொகையரா.

சீர்மேவும்ஆலநகர் சிறப்போங்கிவாழ்ந்திட சிங்கவாகனமீதேறி
பார்மேவும்பக்தர்கள்பண்புடன்வந்துஉன் பாதத்தினில்தாழ்ந்திட

எடுப்பு.

பாவலர்கள் கோடிவருவார் பண்புடன் நாடிஉலகில்
தாமதிக்காமல் பக்தரை தயவுடன்கார்ப்பாய் கபாலி (தாயே)

தொகையரா.

சுக்கிரவாரத்திலே துரிதமாய்தொண்டர்கள்
ஸ்தோத்திரம் செய்துக்கொள்ள
உக்கிரமானபிணிகளை ஒருநொடியில்தீர்த்திட
உன்புகழை எந்தன்நாவால்

எடுப்பு.

உரைக்கவும்போமோ உலகில் தழைத்திடவந்த மாரியே
ஆவலுடன் குமரஸாமி அன்பாய்துதிக்கின்றேன்ஒய்யாரி (தாயே)

காட்சிகண்காட்சியே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

காட்சிகண்காட்சியே புற்றுமாரியம்மனின் காட்சிகண்காட்சியே

அநுபல்லவி.

கண்ணிணைபறக்கவைக்கும் கௌரிஎன் னும்சத்தியின் (காட்சி)

சரணம்

1. கடைகள்வரிசையாக அமைந்தபிரகாசமே
கண்களைபிரமிக்கச்செய்யும் கற்பூரபிரகாசமே
கணக்கில்லாதஇந்து சகோதரர்கள்வாசமே
காணரியநாட்டம் சகோதரர்கள்கூட்டம்
கடைகள்மிகஎதேஷ்டம் கவிவாணர்ஆர்ப்பாட்டம் (காட்சி)

2 பழக்கடைகற்பூரக்கடை பந்தியாகபாருமே
பக்கலில்வெற்றிலைக்கடை பாங்காய்மிகஜோருமே
உத்தமியின்சந்நதிக்கு எதிரேயுள்ளதோப்புமே
ஏட்டரியவாட்டம் எங்கினும்நீரோட்டம்
பக்தர்களின்கூட்டம் பாணவேடிக்கைஎதேஷ்டம் (காட்சி)

3. சீர்கொண்டசிங்கவாகன மீதேறும்ஜோதியே
சித்தமாய்பக்தர்களை காத்திடும்பிரக்யாதியே
கார்கொண்டமேகவண்ணன் சீர்கொண்டதங்கையே
காணரியகூட்டம் கடைகளேஎதேஷ்டம்
மாண்புபெரும்நாட்டம் மகிமைசொலவாட்டம் (காட்சி)

4 எங்கினும்பிரக்யாதிபெற்ற ஆலநகர்க்ஷேத்திரம்
இசைந்தஅயினர்கோவில் புகழ்மேழஓர்பாத்திரம்
கங்கையைசிரசில்வைத்த கர்த்தனின்ஸ்தோத்திரம்
காணரியமாஜனங்கள்கூடி கண்ணியமாய்அம்மனையேநாடி
கருத்துடனேஸ்தோத்திரம் பார்க்கவேண்டும்நேத்திரம் (கா)

சேந்தமிழுலகினில் வந்திட்டசந்தனே என்ற வர்ணமெட்டு.

1 எங்கினும்புகழ்பெற்ற ஈடில்லாபெயர்கள்வாய்ந்த
இருவேலிப்பட்டுரெட்டியார் அவர்பெருமை
எடுத்துச்சொல்வதற்கும் போமோ
இயல்புடன்ஞான உதாரசற்குண ஈடில்லாதொரு ஆனபெருங்குண
எங்கும்புகழ்பெற்றபிரபுவாம் ஏழைகளுக்கோர்
இனியஉதார கனவான் (எங்கி)

2. ஏழைகளின்துயரை மேவிநொடியில்நீக்கும்
இசைந்தகாருண்யபுண்யவான் ஈகைகுணத்தில்
எங்கும்புகழ்பெற்ற கண்யவான்
நல்இதயத்துடனே தர்மம்செய்யும் உலகில்மிகவும் பெருமைவாய்ந்த
ஈடில்லாதநல்லகுணவான் அவர்குணத்தை
எடுத்துசொல்லவும் அரிதாம் (எங்கி)

3. ஆலநகர்புற்றினிடம் அமர்ந்தமாரியர்க்காக
அநேகஉதவிகள்செய்தார் பக்தர்கட்காக
ஆனதர்மங்கள் புரிந்தார்
மிகஅற்புதமாகவே சிங்காரம்செய்திட ஒப்பிலாதொரு பெருமைகள்
ஆனசாமான்கள்அளித்தார் அவர்குடும்பம் [வாய்ந்திட
ஆல்போல்தழைக்க அருள்வாய் (எங்கி)

4. சீர்பெரும்ஆலநகர் மேவிஇருக்கும்எந்தன்
சித்தமகிழ்வுள்ளதாயே சிறுவனே நீ
உத்தமியேகார்ப்பாய் நீயே
மிகதீரத்துடனே மேவிப்பற்பல கோரமான பிணியைத்தீர்க்கும்
சிங்கவாகனவீரியே உன்பெருமையை
சொல்லஎளிதோ மாரியே (எங்கி)

நொண்டிச்சிந்து.

சீர்பெற்றமாரியம்மன் திருக்
கீர்த்தியை நான்மிக எடுத்துரைப்பேன்
பக்தன் ஆறுமுகமுதலி கினவில்
பண்புடனே வந்துரைத்த பார்வதியுமாம்
மேவியுரைத்தகினவோ என்னில்
விளங்கவே யுரைக்கின்றேன் கேட்பீர்களே
மாம்பாக்கம்தன்னைவிட்டு மிக
மாகூஷிமையாய் ஆலநகர் வந்தமர்ந்தேன்
ஏற்கனவேபுகழ்பெற்ற கணிசொல்லும்
என்தமையன் பாண்டுரங்கன் இடம்தேடி
பாதிரியின்மரத்தின்கீழே வெகு
பாங்குடனே புற்றினிடம் வந்தமர்ந்தேன்
என்றுமுதலியார்கினவில் மிக
இன்பமுடன் தானுரைத்து போய்மறைந்தாள்
மாரியம்மன் உரைத்தபின்பு மிக
மாண்புடன் முதலியார் ஊர்க்கறிவித்தே
பிரதிவெள்ளிக்கிழமைதோறும் மிகப்
பேர்பெற்ற பூசாலிகள் வந்துஉடனே
எழ்நிலைக்கரகமுதல் மிக
இசைந்த ஐந்து கரகத்துடனே
பக்தியாய் சிலம்பாட்டம் மிகு
பாங்குடனே வாத்தியங்கள் ஆர்ப்பாட்டம்
உத்தமியின் சந்நிதிக்கே வெகு
உறுதியாய் பிணியாளர் வந்துசூழ்ந்து

அம்மனை தெரிசித்தே வெகு
அன்புடனே பழம்தேங்காய் வாங்கிவந்தே
அர்ச்சனை நைவேத்தியமும் கற்பூர
அலங்காரத்துடனே சுற்றிவந்து
சந்நிதியைவலம்வந்து சூழ்ந்து
தரிசனம் செய்கின்றார் வெகுஜனங்கள்
எத்தனையோ மானிடர்கள் பிணிவைய
ஆனபமாகவேதீர்த்து அருள்கொடுத்த
மாரியம்மன் திருச்சரிதம் மிக
மாண்புபெரும் கும்மியில்நான் சொல்லுகின்றேன்

தந்தினம் தனதனனும்.

பண்டிதமோதிலால்நேரை என்ற வர்ணமெட்டு.

1. ஆலநகர்தனிலமர்ந்த அதிபெலமாரி உன்னை
அன்பர்கள்கோடி—வந்தார்—அன்புடன்நாடி ஆதலால்
அன்புவைத்து பக்தர்களை ஆதரிப்பாயே (ஆல)

2. ஐந்துரெண்டுகரகமுடன் ஆடிடும்தாயே அங்கு
சிலம்புடன்பம்பை—மேள—வாத்தியமுடன் ஆராதனை
அபிஷேகமும் ஸ்தோத்திரமும் அன்புடன்நடக்க (ஆல)

3. வெண்ணைநல்லூர்ஸ்டேஷன்கீழ் பாகத்திலமர்ந்த அய்யனார்
கோவிலுக்கடுத்த—பாதரி—மரத்தின்கீழுள்ள புற்றினில்
பராசத்தியே வந்தமர்ந்தாய் பாலரைக்கார்க்க (ஆல)

4 அகிலம்புகழ்அரசநகர் தன்னில்வாசனும் உந்தன்
அருமைபக்தனும்—உன்னை—அன்புடன்பாடும் சிறுவன்
நாராயணசாமிதன்னை நாளும்கார்ப்பாயே. (ஆல)

கும்மிப் பாட்டு.

1. சத்திசடாக்ஷரி சங்கரிபார்வதி
சாமுண்டிமேல்கும்மி பாடுதற்கு
உத்தமிபெற்றிட்ட ஞானவிநாயகன்
பொற்பாதம்நாமும் துதிப்போமே.

2. சித்தர்கள்போற்றும் ஜெகதீஸ்வரியாம்
தேன்மொழியாள் அந்தபார்வதியாம்
பக்தர்கள்வினையைத் தீர்த்திடவே பரா
சத்தியும் மாரியாய் ஆனவளாம்.

3. வெண்ணைநல்லூரெனும் ஸ்டேஷனடி அந்த
வித்தகி யமர்ந்ததைக்கேளடி கீழ்
பக்கலில் ஐயனர்தோப்பினிடம் பரா
சத்தியும் பார்வதி சீழமர்ந்தாள்

4. அம்மன்பெருமையை யாருரைப்பார் அந்த
ஆதிசேஷனலும் ஆகாது
உண்மையாய் ஒருநாவுடையோன் என்னல்
உரைக்கமுடியுமோ சிற்றறிவோன்.

5. கண்வலிஎன்று சிலபேரும் வெகு
கருத்துடன் கோவில்வலம்வந்து
நன்மையாய்காணிக்கை கப்பங்கள்கட்டியே
நலமடைகிறார் மாரியினல்

6. வெள்ளிக்கிழமையில் உற்சவமாம் அந்த
வேதாந்தமாரி யம்மனுக்கே
எண்ணரியகும்பம் எழுநிலைக்கரகம்
இசைந்துஆடுது பாருங்கடி.

7. பக்தர்களின் துயரைத்தீர்ப்பாள் அந்த
பராசத்திஎன்னும் மாரியம்மன்
உண்மையில்லாத துஷ்டர்களை அவள்
உருக்கிடுவாள் தன்பார்வையினல்.

8. சீர்பெரும் இருவேலிமாநகர் ஸ்ரீமான்
முத்துகுமரப்ப ரெட்டியாராம்
அம்மனுடைய கைங்கரியமாகவே
அநேகஉதவிகள் செய்கிருராம்.

9. பிர்மகுலம் கனம் ராமநாதசாஸ்திரி
பெயர்பெற்ற ஸ்டேஷன்மாஸ்டரடி
நன்மையாய்அம்மனுக் கானபொருள்களை
நாடியேதந்தாராம் பாருங்கடி.

10. ஆதிபராபரி யம்பிகையே தாயே
ஐயனர்கோவி லமர்ந்தசத்தி
நீதியுள்ளபக்தர் களைக்கார்த்திடும்
நிர்மலயோக சௌந்தரியே.

11. ஆலநகர்தன்னில் வாசம்பொருந்திய
அன்பன்குப்புசாமி செட்டியாராம்
அவருடைய கினவினிலே வந்து
அம்மன்சாதித்ததைக் கேளுங்கடி.

12. அய்யனர்கோவி லருகிலிருக்கும் புற்றில்
அன்பனேவந்து அமர்ந்தேனென்று
அத்தன் அருள்இடப் பாகங்கொண்ட
அந்தஅம்மனும்தானுமே போய்மறைந்தாள்.

13. பெயர்பெற்ற ஆலநகரினிலே மிக
பேசரும்கண்கண்ட தெய்வமடி
பார்கொண்ட பிணியாளரின் துயரை
பார்த்திடுவாள் பிணிதீர்த்திடுவாள்.

14. இத்தரைமீதினில் பக்தர் துயர்தீர்க்க
உத்தமியாய்வந்த மாரியரே
நத்திவருகின்ற பக்தர்களைக்காக்க
நாளிலத்தில்வந் தமர்ந்தவளே

15 பார்புகழ் ஆலங் குப்பம்நகர் தன்னில்
பண்பாய் அமர்ந்திட்ட மாரியரை
சீருள்ளபக்தர்கள் எல்லோரும்கூடி
சிறப்பாகநாமும் கொண்டாடுவமே.

16. உத்தமிமாரியின் பாடலதை நானும்
செப்பினேன்சிறுவன் புல்லறிவோன்
தப்பிதம்பாடலில் தானிருந்தால் நீங்கள்
தயைசெய்யவேண்டும் பெரியோரே.

17. இப்பெரும் பாடலதைக்கேட்டு நீங்கள்
சித்தமகிழ்வுடன் செவிசாய்த்து
அத்தனிடம்அருள் பாகம்கொண்ட அந்த
அம்மனைநீங்கள் பணிவீரே.

18 இன்னும்அம்மன் சரித்திரமெல்லாம்
இசைந்ததோர் இரண்டாம்பாகத்திலே
இன்புடனே சொல்லிவருகின்றேன் நான்
இயல்புடன்கேழ்ப்பீர்கள் சீலர்களே.

19. பார்புகழ் ஆலநகர்வாழும் சிறுவன்
பா. பொன்னுசாமி தான்சொன்ன
இயைந்துள்ளஇப்பெரும் பாடலிலே பிழை
இருந்தால்நீங்கள் பொறுப்பீரே.

20 வாழிகணேசனும் தான்வாழி அருள்
வள்ளிமணாளனும் தான்வாழி
ஏற்பெரும்சிங்கத்தில் ஏறிவருகின்ற
ஈஸ்வரிமாரியும் தான்வாழி.

148155

முற்றிற்று.